# புகழ்ச்சிக் கூட்ட நற்செய்தி

2019 மாசி மாதம் 25ம் திகதி தொடக்கம் பங்குனி மாதம் 03ம் திகதி வரை

***“நீர்தான் எனது அரசைக் கட்டியெழுப்பிடத் தகுதியான மகன்”***

(எவுதகேசா–கிரேக்கமொழி)

01. புகழ்ச்சிக்கான அறிமுகம்

- ❖ புபுது பாடல் இல 03 ‘ஆ வந்திடுவீர்…’
- ❖ இம்முறை நாம் காம்பீரமாக நிகழ்த்திய ஆண்டவரின் திருமுழுக்கு மங்கள மகோற்சவத்தின் முதன்மைத் தலைப்பாகிய கடவுளின் ஆவியால் இயக்கப்படுபவர்களே கடவுளின் மக்கள் (உரோமர் 8:14) எனும் வெளிப்பாட்டின் முன்னிலையில் கணப்பொழுது தோன்றி நிற்போம்.
- ❖ தூய ஆவியானவரை பரிசுத்த வேதாகமத்தில் பல்வேறு அடையாளங்களின் வழியாக முன்வைக்கப்பட்டுள்ளது. இதின் ஒரு அடையாளம் ‘காற்று’
- ❖ தூய ஆவியின் காற்று என்று சொல்வது நாங்கள் ஒருவருமே நினையாத இடத்திலிருந்து அரம்பித்து எங்கிருந்து வருகிறது. எங்கே போகிறது என்று நினைக்க முடியாத விதமான மாபெரும் மறைஇரகசியமான பரிசு. (புனித யோவான் 3:8)
- ❖ எங்கள் வாழ்வு எங்கிருக்கிறது? எவ்விடத்தில் இருந்தது? என்று நினைத்துப் பார்க்க முடியாத நேரத்தில் அந்த தூயஆவி எனும் காற்று எங்களை இப் பயணத்தில் அழைத்து வந்து அவருக்கத் தேவையான இடத்தில் உங்களையும் என்னையும் வைத்துள்ளார். அவ்வாறே நாம் நிரந்தரமும் விழிப்புற்று இடமளிக்கையில் இருக்கும் இடத்திலிருந்து இருக்க வேண்டிய இடத்திற்கு அழைத்துச் செல்லும் தூயஆவியாரும் எமது ஒரே ஆண்டவரும் ஒரே மீட்பருமான இயேசுஆண்டவருடன் சேர்த்து அப்பாவும் அம்மாவுமான இறைதந்தைக்கு எமது புகழ்ச்சியை நன்றியை மற்றும் நமஸ்காரத்தையும் ஒப்புவிப்போம்.
- ❖ புபுது பாடல் இல 150 ‘இறைவன் இல்லாத பூவுலகம்….’

02. கடந்த வாரத்திற்கான நற்செய்தியை முன்கொண்டு அனுபவத்தை பகிரவும்.

03. நாளுக்குரிய நற்செய்திக்கானஅறிமுகம்

- ❖ இன்றைய நாளின் நற்செய்தியாக ஆண்டவரின் திருமுழுக்கு மங்கள மகோற்சவ திருப்பலியில் பகிர்ந்து கொண்ட நற்செய்தியை உள்ளடக்கி வடிவமைக்கப்பட்டுள்ளது.
- ❖ எங்கள் அன்பான சுவாமிஅப்பா 1984லிலிருந்து ஆண்டவரின் திருமுழுக்கு மங்களோற்சவத்தில் மிகவும் உன்னதமான வெளிப்பாடொன்றினை எமக்குத் தந்துள்ளார். அந்த வெளிப்பாடானாது புபுது கெரிஸ்மாவில் 2வது அனுபவமாகும். அதாவது இயேசுக்கிறிஸ்துவின் பக்கம் எமது கண், மனம், இதயத்தை உள்ளாக்குவதாகும். அவ்வாறு அவர் பக்கம் பார்க்கையில் எம்மால் பார்க்கக் கிடைப்பது அவரது புத்திரத்தன்மையின் அனுபவத்தையேயாகும்.
- ❖ புகிர்ந்து கொள்ளல் :- இந்த மகனானவர் எவ்வாறு அந்த புத்திரத்தன்மையை உரிமையாக்கிக் கொண்டார்? அப்பாவிற்கு எவ்வாறு கீழ்படிந்தார்? அப்பாவுடன் அந்த தொடர்பினை எவ்வாறு வைத்துக் கொண்டார்?
(அருகிலிருக்கும் ஒருவருடன் பகிர்ந்துகொள்ளவும்)
- ❖ பிலிப்பு 2 :5-11 அவர் இறைவல்லமை, இறைமாட்சி, இறைமகிமை அனைத்திலிருந்தும் வெறுமையாகி எம்மைப் போன்றதொரு மனிதனானார்.
- ❖ பாருங்கள் இந்த அழகான நிகழ்வினை சேறு பூசப்பட்ட, சேறு நிறைந்த யோர்தான் நதிக்கரையை மிதித்தவாறு நூறு ஆயிரம் பேர் வரை அத்தருணம் திருமுழுக்கு யோவானின்

கரத்தால் அந்த நீரில் மூழ்கவைக்கப் பட்டு, திருமுழுக்கினைப் பெற்று, அசுத்தமாகியிருந்த, கலங்கியிருந்த அந்த நீரிலேயே எமது ஆண்டவரும் இறங்குகிறார். அம் மக்களோடு ஒன்றிணைந்து கடைசியானவராக தோன்றி நிற்கின்றார். எவ்வளவு கீழ்படிவு அங்கு நிகழ்ந்ததைப் பற்றி எமக்குத் தெரியும்.

புனித மாற்கு 1:11 "உன் பொருட்டு நான் பூரிப்படைகிறேன்" எனும் வார்த்தைக்கு சமமாக கிரேக்க மொழியில் கூறும் வார்த்தை "எவுதொகேசா" என்பதாகும். இவ்வார்த்தையின் மேலோட்டமான அர்த்தமாவது 'உன் பொருட்டு மகிழ்வுறுகிறேன்.' என்பதாகும். இருப்பினும் இவ்வார்த்தையின் உண்மையான அர்த்தம் "நீர் தான் என் அரசைக் கட்டியெழுப்பிடத் தகுதியானமகன்" என்பதாகும்.

- ❖ 'எவுதொகேசா' எனும் வார்த்தையில் மிகவும் பாரதூரமான, பயங்கரமான பக்கமொன்று இருக்கிறது. அதாவது தகுந்த மகனுக்கு மட்டுமே அரசிற்காக அர்ப்பணமாகிட முடியும். அரசிற்காக வேலை செய்திட முடியும்.
- ❖ இயேசுக்கிறிஸ்து இதனை அறிந்திருந்தார். 30 வருடங்களாக மறை இரகசியமான தூயஅன்பின் முன்னால் மகனானவர் வியப்புடன் பார்த்துக் கொண்டிருந்தார். சிலவேளை அருகிலும் சிலவேளை மறைஇரகசியமான விதத்திலும் எழுந்தருளும் எனது அப்பா வேறுபட்டவர். அனைவரையும் விட வேறுபட்டவர். அன்னியமானவர். இதைப் பற்றி இந்த 'தகுதியுள்ள மகன்' தெரிந்தருந்தார். இருப்பினும் யோர்தான் நதியில் தான் எவுதொகேசா என்பதை திட்டவட்டமாக அறிந்து கொண்டார்.
- ❖ அந்த அனுபவத்துடன் அவர் அப்பாவின் தூய அன்னியமான, வேறுபட்ட, மறைஇரகசியமான அன்பின் முன்னேஅப்பாவின் முன்னே அப்பாவின் தூய விருப்பத்தை முழுமையாக நிறைவேற்றியவாறு சிலுவையில் கடைசி துளி இரத்தம் வரை சிந்தியவாறு வாழ்வினை அர்ப்பணிக்கின்ற அந்த மாபெரும் பயணத்தினை ஆரம்பித்தார்.

04. எமது பக்கம் (சிறு குழுக்களாக பகிர்ந்து கொள்ளவும்)

- ❖ சுவாமி அப்பா வெளிப்பாடாக்கியுள்ளார். இந்த "அரசினை கட்டியெழுப்பிட தகுதியான மகன்" எனும் அனுபவத்திற்காக அழைக்கப்படும் எல்லாருக்கும் அப்பா தந்தை அழைப்பது சிலுவை மொழியிலேயே அதற்கு காரணம் என்னவாயிருக்கும்?
- ❖ தினமும் மறைஇரகசியமான அன்பின் முன்னிலையில் தனிமையாகுங்கள். செபம் செய்யுங்கள். உங்களுக்கு இடமொன்று நேரமொன்று தேவையொன்று இருக்கிறதா? இல்லையேல் இதோ இப்பொழுது தீர்மானத்திற்கு வாருங்கள். அதைப் பற்றி கலந்துரையாடவும்.
- ❖ பரிசுத்த திருச்சபை தாயானவளுக்குள் மறுமலர்ச்சியடைந்திட்ட அனுபவத்தினைக் கொண்டு சென்றிட தகுதியான மகன் ஃதகுதியான மகள் என்பதை ஏற்றுக் கொள்கிறீர்களா? இதற்காக தனிப்பட்ட ரீதியில், குடும்பமாக, புகழ்ச்சி கிராமமாக சங்கமென்ற ரீதியில் எடுக்கக் கூடிய செயல் திட்டங்கள் என்ன?
  அவற்றை செயல்படுத்திட உறுதி கொள்ளுங்கள்.

05. இறுதிப் புகழ்ச்சி

இறைஅரசினை கட்டியெழுப்பிடத் தகுந்த மகன்ஃமகளாவதற்கான எனது வாழ்கையில் மாற வேண்டிய இடங்கள் எவை? இது குறித்து கணப்பொழுது விழிப்புறுவோம். முடியுமாயின் அதில் ஒன்றை ஒருவருடன் புரிந்து கொள்ளவும்.

- ❖ புுது பாடல் இல 291 'திரும்புங்கள் பழக்கப்பட்ட பயணத்தை'

(முதலாவதும் கடைசியும் பந்திகளை பாடவும். புாட முடியாவிடில் வார்த்தைகளுக்கு உள்ளாகவும்)